கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் (''நிறுவனம்'') இன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனம் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும்

முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 பந்தியின் பிரகாரம் தொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பதிலீடு செய்யக்கூடாத போதும் ரூபா 35,394,704 ஆன செலுத்த வேண்டிய மீதிகளை கடன்படுனரிற்கு பதலீடு செய்திருந்ததுடன் ரூபா 1,398,218 ஆன நானாவித கடன்கொடுனர் மீதிக்கு நானாவித கடன்படுனர் பதலீடு செய்யப்பட்டு காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பெறுப்புக்கள் ரூபா 36,792,922 குறைத்து காட்டப்பட்டிருந்தது.	இம் மீதிகள், கடன்படுனர் மற்றும் முற்பண பெறுவனவு மீதியாவதுடன் பதிலீடு செய்யப்படவில்லை. கணக்கு குறிப்பு இலக்கம் 18 A மற்றும் 18 B மூலம் இந்த பெறுமானங்கள் காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டில் கடன்படுனர் மீதிகளின் பெறுமதி சரியாக காட்டப்பட்டுள்ளது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பதிலீடு செய்யாது வெவ்வேறாக காட்டப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 05 இன் 31 பந்தியின் பிரகாரம் நிதி உருப்படிகளில் ஏற்படும் அன்னிய செலாவணி வித்தியாசத்தை அது ஏற்பட்ட காலப்பகுதிக்குரிய மிகைக்கு அல்லது பற்றாக்குறையுடன் இனங்காண வேண்டிய போதும் ரூபா 7,333,133 ஆன டொலர் சேமிப்பு கணக்கின் பரிமாற்ற நட்டத்தை மீளாய்வாண்டில் ஏனைய செயற்பாட்டு வருமானத்திலிருந்து குறைத்து காட்டிய காரணத்தால் வருமானம் மற்றும் செலவு சம அளவால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.	நியமம் பிரகாரம் சரி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமம் பிரகாரம் நிதி உருப்படிகளில் ஏற்படும் அன்னிய செலாவணி வித்தியாசத்தை அது ஏற்பட்ட காலப்பகுதிக்குரிய மிகைக்கு அல்லது பற்றாக்குறையுடன் இனங்காண வேண்டும்.
(இ)	பூரோ பணத்தினால் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் வைப்புக் கணக்கில் மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட யூரோ 76,655 மீதியை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 05 இன் 43(அ) பந்தியின் பிரகாரம் அத்திகதியில் காணப்பட்ட பரிமாற்ற பெறுமதியில் பெறுமானமிடுவதற்கு பதிலாக கொடுக்கல் வாங்கல் இடம்பெறும்	தவறுதலாக அப் பெறுமானம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	நியமம் பிரகாரம் அன்னிய செலாவணியில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் வைப்புக் கணக்குகளில் காணப்படும் மீதிகளை மீளாய்வாண்டு இறுதியில்

	சந்தர்ப்பத்தில் பரிமாற்ற பெறுமதியில் காட்டியதன் காரணமாக பணம் மற்றும் பணத்திற்கு சமமானவற்றின் பெறுமதி ரூபா 2,599,041 இனால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது.		காணப்படும் பரிமாற்ற பெறுமதிக்கு பெறுமானமிடப்பட வேண்டும்.
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 39 தொடக்கம் 43 வரையான பந்திகளின் பிரகாரம் எதிர்பாரா சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் இனங்காணாது வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறாயினும் நிறுவனத்துடனான பிணைமுறிகளை மீறிய 20 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 13,674,801 தொகை கிடைக்க வேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் உடன்படிக்கையை மீறியதற்காக அறவிட்ட ரூபா 8,474,545 தொகையை திறைசேரிக்கு அனுப்பாது Staff Activity Fund எனும் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.	நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய மீதிகளாக மற்றும் அதற்காக நிதிஏற்பாட்டை ஒதுக்கும் கணக்கொன்றையும் காண்பித்துள்ளதுடன் எதிர்காலத்தில் நியமம் பிரகாரம் வெளிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தர்களிடம் இருந்து கிடைத்த தொகையை சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமம் பிரகாரம் எதிர்பாரா சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் சொத்தாக இனங்காணாது வெளிப்படுத்த வேண்டும். மேலும் உடன்படிக்கை மீறியதற்காக அறவிட வேண்டிய தொகையை திறைசேரிக்கு அனுப்ப வேண்டும்.
(உ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் பின்னிணைப்பில் காட்டப்படும் செயற்பாட்டு வழிகாட்டியின் 8 பிரகாரம் விஞ்ஞான ரீதியான மற்றும் தொழில்நுட்ப செயற்திட்டங்களின் பூர்த்தி நிலையை கவனத்திற் கொண்டு செலவினத்தை இனங்காண வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது அவ்வாறான செயற்திட்டங்களிற்காக செய்யப்பட்ட ரூபா 34,802,114 ஆன கிரயத்தை நடைமுறை வேலைகளாக சொத்துக்களின் கீழ் இனங்காணப்பட்டிருந்தது.	நியமம் பிரகாரம் ஆராய்ச்சி செயற்திட்டங்களின் பூர்த்தி நிலைமையை செலவாக இனங்கண்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமம் பிரகாரம் முழுமையாக பூர்த்தியடையாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்திட்டங்களின் பூர்த்தி நிலையை கவனத்திற் கொண்டு செலவினத்தை இனங்காண வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டில் திறைசேரி இலிருந்து கிடைத்த மூலதன மானியம் ரூபா 94,000,000 தொகை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைத்த வருமானமாக இனங்காணாது	நியமம் பிரகாரம் சொத்துக்களிற்கு செய்த பெறுமானத்தை மாத்திரம் வருமானத்திற்கு செம்மையாக்க வேண்டியதுடன் அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் மூலதன மானியத்தின் மூலம் பூர்த்தி	நியமம் பிரகாரம் திறைசேரியிலிருந்து கிடைத்த மூலதன மானியம் பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்களினால் கிடைத்த

	திரண்ட நிதியத்திற்கு சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது.	செய்த பெறுமானத்தை குறிப்பு இலக்கம் 5A1 ஊடாக வருமானத்திற்கு இணக்கம் செய்யப்பட்டுள்ளது.	வருமானமாக இனங்காண வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	நிறுவனத்தின் ஒவ்வொறு பிரிவுகளிற்கிடையே சேவை வழங்கலிற்குரியதாக ரூபா 3,842,254 தொகை வருமானமாக மற்றும் அதற்குரிய கிரயத்தை செலவாக இனங்கண்டிருந்த போதும் இது தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	இப் பெறுமதி நிறுவனத்தின் ஒவ்வொறு பிரிவுகளிற்கிடையே சேவை வழங்குவதன் மூலம் இனங்கண்டு பெறுமானமாவதுடன் இலாபத்தில் அதிகரிப்பு ஏற்படுவதில்லை.	நிறுவனத்தின் ஒவ்வொறு பிரிவுகளிற்கிடையே சேவை வழங்குவதற்குரியதாக வருமானம் மற்றும் செலவுகளை இனங்காண குறித்த கணக்கீட்டு நியமத்துடன் கணக்கீட்டு கொள்கையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும்.
(ஆ)	14 நிலையான வைப்புக்கள் மற்றும் ஏனைய 02 வைப்புக்களிற்காக மீளாய்வாண்டிற்குரியதாக ரூபா 30,038,526 ஆன வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 28,122,739 ஆக ரூபா 1,915,787 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் மேற்குறித்த 14 நிலையபான வைப்புக்களிற்குரியதாக மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 5,485,684 ஆன போதும் அம் மீதியை ரூபா 19,157,057 ஆக காட்டியிருந்த காரணத்தால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 13,671,373 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. யூரோ சேமிப்பு வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 26,434,499 ஆன மீதி மற்றும் ரூபா 30,000,000 ஆன நிலையான வைப்பொன்றிற்காக ஆண்டிற்குரிய வட்டி வருமானத்தை நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பாக பரீட்சித்து தேவையான சீராக்கங்களை சரியாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	வட்டி வருமானம் சரியாக கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 10,825,952 ஆன இனங்காணப்படாத	நேரடி வங்கியிலிடலை இனங்கண்டு தேவையான	2012 ஆண்டிலிருந்து

	வங்கி நேரடி வைப்புக்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக அட்டுறு செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	செயற்பாடுகள் சிலவற்றை நடைமுறைப்படுத்தி உள்ளதுடன் வங்கியையும் அறிவுருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிலவிவரும் இந்த இனங்காணப்படாத நேரடி வங்கி வைப்பை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	பராதீனத்திற்குரிய எனினும் இதுவரை பராதீனம் செய்யப்படாத கிரயம் கூட்டுத் தொகை ரூபா 48,471,163 ஆன ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள் மேலும் அதற்குரிய பெறுமானத் தேய்வு ஒதுக்க கூட்டுத் தொகை ரூபா 47,603,778 தொகை கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக ரூபா 867,385 ஆன ஆதன பொறிகள் மற்றும் உபகரண தேறிய பெறுமதி குறைத்து காட்டப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் பராதீன நடவடிக்கைகளை நிறைவு செய்து சரியாக கணக்குகளில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.	உரியவாறு பராதீனம் செய்யும் வரை நிலையான சொத்து மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கத்தை கணக்குகளில் இருந்து அகற்றக் கூடாது.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறவேண்டிய மீதியினுள் 03 இற்கும் 17 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமாக அறவிடப்படாத காணப்படும் கூட்டுத் தொகை ரூபா 40,476,583 ஆன நானாவித கடன்படுனர் மீதியை மீளாய்வாண்டிலும் அறிவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சு வாடகை அடிப்படையில் கைத்தொழில் தொழில்நுடப நிறுவனத்தில் இருந்த காலத்திற்குரியதாக கிடைக்க வேண்டிய வாடகை ஆவதுடன் இதனை பெற்றுத்தருமாறு பல முறைகள் கோரப்பட்டுள்ளன. முகாமைத்துவ தகவல் தொகுதி, இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், ஒக்சிஜன் ஹவுஸ், WHT Tax, VAT WHT ஆகிய உருப்படிகள் 10 ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் மீதியாவதுடன் இந்த மீதியை அறவிடுவது கடினமாக உள்ளது.	நீண்ட காலமாக நிலவிவரும் மீதிகளை அறவிட சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நிறுவனத்தின் நலன்புரி சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1,003,250 ஆன கடன் தொகை மற்றும் 2020 ஆண்டில் அரச வர்த்தக	நலன்புரி சங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன் தொகையின் ஒரு பகுதியை இந்த ஆண்டில்	பெறவேண்டிய தொகையை அறவிட முறையான

கூட்டுத்தாபனத்திகு வழங்கியிருந்த கை தொற்றுநீக்கி பொருட்களின் பெறுமதி ரூபா 11,415,309 தொகையை அறவிடாது நூறு வீதம் ஐயக்கடன் ஒதுக்கப்பட்டிருந்தது.	செலுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டது. அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த கை தொற்றுநீக்கிகளின் பெறுமதி ரூபா 11,415,309 தொகையை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	செயற்பாடுகளை எடுக்க வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
2017 முதல் 2021 வரையான காலப்பகுதிக்கு உரிய நிர்மாணம் மற்றும் பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கான நிறுத்தி வைத்தல் ரூபா 8,821,486 தொகை மற்றும் ஆண்டு 02 முதல் 12 வரையான காலமாக நிலவிவரும் ரூபா 7,001,990 ஆன செலுத்த வேண்டிய 06 மீதிகளை மீளாய்வாண்டு இறுதி வரை தீர்த்திருக்கவில்லை.	இந்த நிறுத்தி வைத்தலில் ரூபா 5,159,873 தொகை உள்ளக கணக்காய்வு அறிக்கை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீதி இவ்வாண்டில் தீர்க்கப்படும். Refund customer over payment, 2015 VAT Over payment, இம்மீதி VAT வரி விகிதம் மாற்றமடையும் சந்தர்ப்பங்களில் கிடைத்த வரித் தொகையாவதுடன் அவ்வாறு கிடைத்த அனைத்து பெறுமானங்களும் குறித்த வாடிக்கையாளர்களின் கோரிக்கையின் பெயரில் மீள் செலுத்துவதற்காக இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளது.	நீண்ட காலமாக நிலவிவரும் இந்த செலுத்த வேண்டிய மீதியை தாமதமின்றி தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	வருமான வரிக்கு பதிவு செய்ய அல்லது வரி விடுவிப்பு பெற்றுக் கொள்ள நடவடிக்கை
(அ)	2017 இன் 17 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 9(i) பிரிவு	வருமான வரிக்கு பதிவு செய்ய அல்லது வரி விடுவிப்பு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2023/24 ஆண்டிற்கு உரியதாக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் வருமான வரிக்காக பதிவு செய்துள்ளதுடன் அதற்காக நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.	வருமான வரிக்கு பதிவு செய்ய அல்லது வரி விடுவிப்பு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவு	பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதிவி 2024 ஏப்ரல் மாதம் முதல் வெற்றிடமாக காணப்பட்டது.	ஆட்சேர்ப்பு செய்ய அங்கீகாரம் கிடைத்த உடனே குறித்த ஆட்சேர்ப்பு செய்யப்படும்.	வெற்றிட பதவிக்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை ஆட்சேர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ) (i)	2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5)	2024, 2023 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் வழங்குனரிற்காக வழங்கியிருந்த கூட்டுத் தொகை ரூபா 17,618,815 ஆன முற்பணம் தீர்க்கப்பட்டு இருக்கவில்லை. கட்டுநிதி வழங்கப்பட்ட நிதியாண்டு திசெம்பர் 31 திகதி அல்லது அதற்கு முன்னர் தீர்க்க வேண்டிய போதும் நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 திகதிக்கு தீரக்கப்படாத ரூபா 2,521,914 ஆன உப கட்டுநிதி மீதியொன்று நிலவியது.	விரைவில் கட்டுநிதியை தீர்த்துக் கொள்ள தேவையான அனைத்து படிமுறைகளையும் எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	பணி நிறைவடைந்த பின்னர் முற்பண தீர்ப்பு விரைவில் செய்யப்பட வேண்டும். மேலும் நிதி பிரமாணம் பிரகாரம் ஆண்டிறுதியில் அனைத்து கட்டுநிதிகளையும் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 756 (6)	2023 மற்றும் 2024 ஆண்டுகளிற்குரிய பண்டக கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.	2023 அறிக்கை பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2024 அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதனை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	நிதிப் பிரமாணம் பிரகாரம் பண்டக கணிப்பீட்டை மேற்கொண்டு அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு கால சட்டகத்தினுள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 பிரிவு	பெறுமதியில் 20 சதவீதத் தொகையை மாத்திரம் முற்பணமாக செலுத்த வேண்டிய போதும்	அவற்றில் அநேகமானவற்றிற்காக பண்டங்கள் கிடைத்து அல்லது சேவை வழங்கப்பட்டுள்ளதுடன் GRN குறிப்பை	பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் பெறுமதியின் 20 சதவீதத்திற்காக மாத்திரம் முற்பணம் வழங்க வேண்டும்.

		உள்நாட்டு கொள்வனவுகளிற்காக வழங்குனர்களிற்கு மொத்த பெறுமதியையும் முற்பணமாக செலுத்தப்பட்டு இருந்தது.	தயாரிக்க காணப்படும் சில தாமதங்கள் காரணமாக இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் முற்பணம் வழங்கல் மற்றும் கொள்வனவு செய்யப்படும் பண்டங்களிற்காக கொடுப்னவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் மேற்கொள்ள நடடிக்கை எடுக்கப்படும்.	
(உ)	2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகம் செய்யப்பட்ட அரசிற்கு சொந்தமான முயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூலின்			
(i)	3.2 பிரிவு	மீளாய்வாண்டில் சேமித்த விடுமுறைகளிற்கு கூட்டுத் தொகை ரூபா 10,842,115 தொகை 2025 ஆண்டில் செலுத்தப்பட்டுள்ள போதும் அதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டு இருக்கவில்லை.	முகாமைத்துவம் கருத்துத் தெரிவிக்கவில்லை.	சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக் கொண்ட பின்னர் இவ்வாறான படிகளை செலுத்த வேண்டும். முறையான அங்கீகாரமின்றி செலுத்திய படிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	6.6 பிரிவு	நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் வருடாந்த அறிக்கையின் வரைபு கணக்காய்வாளர்	எதிர்வரும் ஆண்டில் வருடாந்த அறிக்கையின் வரைபை நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை	சுற்றறிக்கை பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் மீளாய்வாண்டிற்குரிய வரைபு வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியதுடன் கடந்த ஆண்டுகளில் வருடாந்த

		நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் நிறுவனத்தினால் வருடாந்த அறிக்கையின் வரைபு கணக்காய்வு திகதியான 2025 ஜுன் 16 திகதி வரையும் சமர்ப்பித்திருக்கவில்லை. 2022 மற்றும் 2023 ஆண்டுகளிற்கு உரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	எடுப்பதாகவும் 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	2024 திசெம்பர் 23 திகதிய இலக்கம் PED/03/2024 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 01 பிரிவு	2023 ஆண்டில் ஈட்டியுள்ள இலாபத்தில் இருந்து குறைந்தபட்சம் 30 சதவீதத்தை திரண்ட நிதியத்திற்கு இலாபப்பங்கு / செலவுவரியாக செலுத்தாத நிறுவனங்கள் இலாபத் தன்மையின் மீது அடிப்படையில் ஆளணிக்கு மிகை ஊதியத்தை செலுத்த உரித்தற்ற போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது நிறுவனத்தினால் மீளாய்வாண்டில் மிகையூதியம், ஊக்குவிப்பு படிகள் மற்றும் விடுமுறை படிகளாக ரூபா 35,210,816 செலுத்தியிருந்தது.	முகாமைத்துவம் கருத்துத் தெரிவிக்கவில்லை.	சுற்றறிக்கை பிரகாரம் திரண்ட நிதியத்திற்கு உரிய செலவு வைத்தலை செய்திருக்காததால் மிகையூதியம் பெற்றுக் கொள்ளும் உரித்தில்லாததுடன் மிகையூதியம் செலுத்தக் கூடாது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 81,056,338 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நெரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 92,240,946 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 11,184,608 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு தரநிர்ணய சேவை வருமானம், மதியுரை சேவை வருமானம், ஒப்பந்த செயற்திட்ட வருமானம் மற்றும் மீண்டெழும் பெறுவனவு கூட்டுப் பெறுமதி ரூபா 40,649,823 இனால் அதிகரித்தமைக்கு ஒப்பாக தனிநபர் சம்பள ஊதிய செலவு, பராமரிப்பு செலவு, ஒப்பந்த சேவை செலவுகள் மற்றும் பிரயாணச் செலவு கூட்டுப் பெறுமதி ரூபா 74,817,200 இனால் அதிகரித்தமை மற்றும் வழங்கல் சேவைகள் செலவு மற்றும் செயற்திட்ட செலவு கூட்டுப் பெறுமதி ரூபா 17,482,112 இனால் குறைந்தமை முக்கியமான காரணமாக இருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	அபிவிருத்தியடைந்த நாடுகளில் உயர் மருந்தக ஆய்வுகூடங்களில் வசதிகளுடன் கூடிய ஜீஎல்பீ (GLP) நிலைமைகள் உள்ளடங்களாக அங்கீகாரம் பெற்ற அதிநவீன ஆய்வுகூடமொன்றை திறைசேரி நிதிஏற்பாடு ரூபா 99,423,972 செலவில் நிறுவனத்தினுள் நிறுவப்பட்டு 2019 ஆண்டிலிருந்து பேணிச் சென்றிருந்தது. எவ்வாறாயினும் நாட்டிலுள்ள வைத்தியசாலைத் தொகுதி உள்ளடங்களாக அனைத்து மேற்கத்தேய மருந்துகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் விநியோகிக்கும் பணியை ஒழுங்குபடுத்தும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையுடன் மேற்குறித்த ஆய்வுகூட சேவைகளை வழங்குவது தொடர்பாக உடன்பாடு இல்லாத காரணத்தால் இரசாயனகூடத்தை தாபித்ததன் பிரதான நோக்கமான இலங்கையில் மருந்தகத் துறையின் அபிவிருத்திக்காக சுயாதீன அங்கீகாரம் பெற்ற மூன்றாம் தரப்பு ஆய்வுகூடமாக இந்த ஆய்வுகூடம் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. மேலும், அங்கு எதிர்ப்பார்த்த	கம்பனிகளினால் இறக்குமதி செய்யப்படும் மருந்து உற்பத்திகளை பரீட்சிப்பதனை முறையாக்குவதற்காக அரச வழிகாட்டல் மற்றும் நிதி அனுசரணை மீது அடிப்படையாக கோண்டு இரசாயனகூட மருந்து உற்பத்திகளின் தரம் தொடர்பான மூன்றாம் தரப்பினரின் சுயாதீன பரீட்சிப்பு கட்டாயப்படுத்தளிற்காக சுகாதார அமைச்சு தேவையான கொள்கைரீதியான மாற்றங்கள் மேற்கொள்ளும் எனும் எதிர்ப்பார்ப்பில் இரசாயன கூடம் ஆரம்பிக்கப்பட்டது. மருந்து ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை மூன்றாம் தரப்பின் பரீட்சிப்பை கட்டாயபடுத்தி இல்லாததனால், மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் தமது உற்பத்திகள் பரீட்சிப்பிற்காக ITI இற்கு வருவது இல்லை.	இரசாயன கூடத்தை தாபித்து 05 ஆண்டுகளை விட அதிக காலமொன்று விஞ்சி இருந்ததுடன் சுகாதார அமைச்சிடன் கலந்துரையாடி இந்த இரசயானகூடத்திலிருந்து பயன் பெறுவதற்று முறைமையொன்று தாபிக்க நடவடிக்கைை எடுத்து இரசாயனகூடத்தை பயன்படுத்த பொறுப்பேற்றிக்கொள்ள வேண்டும்.

	நோக்கங்களிற்கிடையிலான மருந்துகள் பகுப்பாய்விற்காக உள்ளநாட்டில் மற்றும் சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நிலையமொன்றாக மாற்றுதல், மருந்து துறைகளுக்கு தேவையான அனைத்து துப்புகளையும் இரசாயன மற்றும் பௌதீக ரீதியாக பகுப்பாய்வு செய்தல், மருந்துகளின் தரம் தொடர்பான தேசிய பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் மருந்துகளின் உள்ளநாட்டு பிரமாணங்கள் மற்றம் வழிகாட்டிகளை வலு ஊட்டல் இதுவரை அடைப்பெறவில்லை.		
(ஆ)	2016 ஆகஸ்ட் 31 திகதிய இலக்கம் அப/16/1576/19/96 கொண்ட அமைச்சரிவை தீர்மானம் மற்றும் இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் விதிப்புகளிற்கு இணங்க மூன்றாம் தரப்பு பெட்ரோலிய பொருட்கள் உற்பத்திகளின் தரத்தை பரீட்சிப்பதற்காக 2014 - 2020 காலத்தினுள் ரூபா 117,776,752 செலவில் பெட்ரோலியம் மற்றும் மசகு எண்ணெய் இரசாயன கூடமொன்றை நிறுவி தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்திருந்த போதும் பெட்ரோலிய எண்ணெய் மாதிரிகள் கிடைக்கும் முறைமையொன்றை அமைத்திருக்காத காரணத்தால் இரசாயன கூடத்தை நிறுவியதன் நோக்கம் அடையப்பெற்று இருக்கவில்லை.	இந்த இரசாயனகூடத்திற்கு ஒழுங்குபடுத்தும் அதகார (Regularity Authority) சக்தி இல்லாததால் அனைத்து மாதிரிகளும் எமது இராசான கூடத்திற்கு கிடைப்பதில்லை. இந்த செயன்முறை அடிப்படை நோக்கத்தில் காணப்படுவதுடன் இது தேசிய ரீதியான தேவைப்பாடு ஆகையால் அதற்காக வலுசக்தி அமைச்சு மற்றும் இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முழுமையான அர்ப்பணிப்பின் மீது அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கூடிய விரைவில் நடைமுறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	திறைசேரி நிதியை செலவிட்டு இரசாயன கூடத்தை நிறுவி 5 ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்துள்ளதுடன் இந்த பிரச்சினை தொடர்பாக நிறுவனத்துடன் உடன்பாட்டுடன் மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் செயன்முறை ஒன்றை தயாரித்து இரசாயன கூடத்தை நிறுவிய அடிப்படை நோக்கத்தை அடைந்து கொள்ள மற்றும் இரசாயன கூடத்தை பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2020 – 2024 காலப் பகுதியினுள் ஆராய்ச்சி பணிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிற்கு அடிப்படை சம்பளத்தின் 35 சதவீதமான ஆராய்ச்சி படிகளாக கூட்டுத் தொகை ரூபா 100,314,680 செலுத்தியிருந்த போதும், நிறுவனத்தை உருவாக்கியதன் அடிப்படை நோக்கமான இலங்கையின்	கைத்தொழில் மற்றும் நாட்டின் கேள்வியின் மீது அடிப்படையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முன்னுரமை துறை /அடிப்படைகள் முக்கியமாக தெரிவு செய்யப்படுகின்றன. 2025 இற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முன்னுரிமை, தேசிய கொள்கையின் மீது அடிப்படையில் தயாரிக்கப்பட்ட கைத்தொழில் தொழில்நுட்ப	ஆராய்ச்சி பணிகளில் ஒப்பந்த காலத்தினுள் தரமான மற்றும் ஆக்கபூர்வமான புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல் மற்றும் அத் தொழில்நுட்பத்தை சந்தைக்கு அறிமுகம் செய்வதனூடாக

	தொழில்நுட்ப மட்டத்தை உயர்த்துவதற்காக உற்பத்திகளின் தரத்தை, தொழில்நுட்ப கைத்தொழற்சாலைகளில் பயன்படுத்தும் தொழில்நுட்ப செயன்முறையை மற்றும் முறைமையை மேம்படுத்த மற்றும் கைத்தொழிலில் பயன்படுத்துவதற்காக புதிய செயன்முறை மற்றும் மூலஉத்திகளை கண்டுபிடிப்பதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதனை துரிதப்படுத்த மற்றும் நாட்டிற்கு மிகவும் ஆக்கபூர்வமான தொழில்நுட்ப பங்களிப்பை வழங்க முடியமான ஆராய்ச்சிகளை இனங்காண்பது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் எந்தவித அரசிறை வருமானமும் நிறுவனத்திற்கு கிடைத்திருக்காததுடன் கடந்த ஆண்டில் கிடைத்த அரசிறை வருமானம் ரூபா 580,000 ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	நிறுவனத்தின் மூலோபாய திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்படும்.	அரசிறை வருமானத்தை அதிகரித்துக் கொள்ள போன்றே புதிய ஆராய்ச்சி தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்களின் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க முடியுமான நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.
(ஈ)	நிறுவனம் 2021 ஆண்டில் ஆரம்பித்து 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் நிறைவு செய்ய வேண்டிய கிரயம் கூட்டுத் தொகை ரூபா 60,135,000 ஆன 23 ஆராய்ச்சி செயற்திட்டங்களை நிறைவு செய்திருக்காததுடன் 2025 ஜுன் 30 திகதி வரை ஒப்பந்த காலத்தை விஞ்சி 01 ஆண்டிற்கும் 03 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் கடந்திருந்தது. அவற்றில் 16 செயற்திட்டங்கள் கால நீடிப்பு செய்யப்பட்டிருந்த போதும் 05 செயற்திட்டங்களிற்கான கால நீடிப்பும் முடிவடைந்து 03 மாதங்களிற்கும் 13 மாதங்களிற்கும் இடையிலான காலம் கடந்திருந்தது.	ஆராய்ச்சி செயற்திட்டங்களின் ஒப்பந்த காலத்தினுள் நிறைவு செய்வதற்காக ஆராய்ச்சியாளர்களிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	திறைசேரி மானியங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்தவும் திட்டமிட்டவாறு ஆராய்ச்சி செயற்திட்டங்களை உரிய ஒப்பந்த காலத்தில் நிறைவு செய்து கொள்ளவும் இறுதி அறிக்கையை உரிய திகதியில் பெற்றுக் கொள்ளவும் முடியுமானவாறு குறித்த சட்ட விதிகன் மற்றும் கட்டுப்பாட்டு முறைமையை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	கை தொற்று நீக்கி பொருட்களை உற்பத்தி செய்யும் போது பயன்படுத்த முடியுமாக இருந்த ரூபா 7,910,360 தொகையான எதநோல் தொகையொன்று நிறுவனத்தினால் பயன்படுத்தாது ஆண்டு முழுவதும் விளைவற்று நிலவியது.	2020/2021 ஆண்டுகளில் நிலவிய கொவிட் நிலைமை முன்னில் கை தொற்று நீக்கிகளுக்காக எதநோல் பயன்படுத்தியதுடன் தற்போது அதற்காக உள்ள குறைந்த கோரிக்கை மீது குறித்த உற்றபத்தி மேற்கொள்ளப்படவில்லை. எனினும் இந்த எதநோல் பயன்படுத்தி BIO DIESEL மற்றும் சலவை கரைசல் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	இந்த இருப்பை காலாவதியாக முன்னர் பயன்படுத்துவதற்கு அல்லது ஏனைய உரிய நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நிறுவனத்தின் வருடாந்த டீசல் பயன்பாட்டின் பெறுமதி ரூபா 319,637 தொகையாக இருக்கும் போது எரிபொருள் பற்றாக்குறைக்கு தீர்வொன்றாக எரிபொருள் இருப்பு பேணிச்செல்வதற்கு எடக்கப்பட்ட முடிவின் மீது 2022 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,316,281 தொகையான டீசல் லீற்றர் 7,177 ஆன இருப்பொன்றை நிறுவன வளவினுள் 8000 லீற்றர் கொள்ளவுடன்கூடிய 02 தாங்களில் களஞ்சியபடுத்தி காணப்பட்டன.	தற்போது நிறுவனத்தின் டீசல் மூலம் செலுத்தப்படும் வாகனங்களிற்காக இதனூடாக எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிறுவனத்தின் தேவைபாட்டின் மீது எரிபொருள் பாதுகாப்பு இருப்பு பேணிச்செல்ல வெண்டியதுடன் தேவையற்றவாறு இருப்பு சேககரித்தல் செய்யக்கூடாது.
(இ)	மாலம்பே அமைந்துள்ள மருந்து தொழில்நுட்ப பிரிவுனுள் (Herbal Technology Section) உள்ள பரீட்சிப்பு சேவைகள் வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் ரூபா 2,202,614 பெறுமதியான 04 இயந்திரங்கள் 2019 ஆண்டு முதல் செயலிழந்து காணப்பட்டதுடன் கணக்காய்வு திகதியான 2025 ஜுன் 20 திகதி வரை திருத்தப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த உபகரணங்கள் திருத்தப்படுவதற்கான கிரயம் அதிகமாவதுடன் அவ்வாறு திருத்திய போதும் தேவையான யெற்திறன் கிடைக்காததனால் பராதீனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்	செயலற்று காணப்படும் இயந்திரங்களை விரைவில் உரியவாறு திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.அவ்வாறு முடியாலிடின் மாத்திரம் பராதீனம் செய்ய வேண்டும்.